DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.38 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | செல்லமுத்து | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.03.2023.

**( முதல் விசாரணை ):**

நான் கல்லாபுரத்தில் வசித்து வருகிறேன். பூட்டு சாவி கடையில் வேலை செய்து வருகிறேன். 04ம் மாதம் 2014ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. மதியம் 2.00 மணிக்கு தளி ரோட்டில் உள்ள கடைக்கு வந்தபோது ஓனர் இல்லாததால் அவர் வீட்டிற்கு சென்றபோது வீட்டில் இருந்த நகை காணாமல் போனதாக எனது முதலாளி சொன்னார். உடுமலை போலிசார் அங்கு வந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் **(பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த பார்வை மகசர் அசாஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அபுதாகீரிடம் தான் வேலை செய்கிறேன். நகை காணாமல் போன தேதி தெரியாது. நகை காணாமல் போனதாக காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் சென்றபோது வீட்டின் கதவு, பூட்டு

உடைந்திருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லைா. நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு கையெழுத்து தான் போட்டேன் என்னுடன் கையெழுத்து செய்தது யார் என்று தெரியாது. புகார்தாரர் முதலாளி என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு முதலாளி வீட்டில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் தான் நகை எப்போது காணாமல் போனது என்று தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.